வெலிவிடிய திவிதுர பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	எத்கந்துர புரநெகும கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 4.02 மில்லியன் பெறுமதியான சோலார் முறைமை மற்றும் காப்பு கவிசையின் பெறுமதி இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் மற்றும் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என.	நிலையான சொத்துக்களை உரிய முறையில் இனங்கண்டு சரியான வகைப்படுத்தலின் கீழ் காட்டப்பட வேண்டும்.

(ஆ)	கூட்டுப் பெறுமதி ரூபா 418,050 தொகைக்கான பாதுகாப்பு கெமரா முறையின் பெறுமதி இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என.	நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்து உரிய முறையில் இனங்கண்டு சரியான வகைப்படுத்தலின் கீழ் காட்டப்பட வேண்டும்.
(இ)	நூலகத்திற்காக நன்கொடையாக கிடைத்திருந்த புத்தகங்ளின் பெறுமதி ரூபா 52,413 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குறைவாக மீளளிப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 47,033 இற்கான நிரந்தர பதவியணியினர் சம்பளச் செலவு பெற வேண்டிய மீதி ஒன்று என கணக்கீடு செய்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	பெற வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1.78 மில்லியன் தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுத்தொகை ரூபா 15.37 மில்லியன் தொகைக்கான 02 கணக்கு விடயங்களுக்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	2025 ஆண்டு முதல் பதிவேடொன்று பேணப்பட்டு நாளதுவரையாக பேணிச் செல்லப்படுகின்றது என.	கணக்காய்விற்குத் எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571	02 வருடங்களை மிகையான ரூபா 1.77 மில்லியன் தொகை தொடர்பாக 73 மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6.82 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 4.82 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	772,750	1,008,578	973,152	59,494	663,000	812,853	821,629	24,068
வாடகை	259,200	327,096	325,696	-	343,200	129,540	140,680	(1,400)
அனுமதிப் பத்திரக் கட்டணம்	321,350	542,075	-	542,075	86,200	329,259	329,259	-
ஏனைய வருமானங்கள்	7,295,050	5,226,031	5,293,767	45,987	2,058,500	6,112,507	6,100,679	113,723
	8,648,350	7,103,780	6,592,615	647,556	3,150,900	7,384,159	7,392,247	136,391

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் உபபிரிவு 134(1) இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீதவரி மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வீதவரி விதிப்பதற்காக தேவையான அறிக்கைகள் பெற்றுக்கொள்ளல் நடைபெறுகின்றது என.	வீதவரி அறவிடப்பட வேண்டிய அனைத்து ஆதனங்களில் இருந்தும் காலரீதியாக வருமானம் சேகரிக்க வேண்டியிருந்ததுடன், இவ்வாறு மேற்கொள்ளாமை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
(ஆ) வாடகை		
2017 ஆண்டு முதல் மாதாந்தம் ரூபா 200 இற்கான வாடகை தொகையொன்றிற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த, பயன்படுத்த முடியாத மட்டத்தில் காணப்படுகின்ற 10 கடையறைகள் வாடகைக்கு கொடுத்த நாள் முதல் இடையிடையே மூடப்பட்டிருந்ததுடன், இந்தக்	காணியின் உரிமையை சட்டரீதியாக சபைக்கு உரித்தாக்கிக் கொண்டு கடையறைகளின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	மூடப்பட்டு காணப்பட்ட 10 கடையறைகளின் திருத்த வேலை மேற்கொண்டு சரியான டென்டர் நடவடிக்கை முறையின் படி தரப்பினர்களுக்கு வழங்கி வருமானமொன்றை

கடையறைகளின் திருத்த வேலையை மேற்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		உழைக்க வேண்டும்.

(இ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 0.13 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4.62 மில்லியன் தொகை காணப்பட்டது.	நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மூன்று ஆயுர்வேத நிலையங்களுக்காக ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், பிரதேச பொது மக்களுக்கு வாரத்தில் 05 தினங்களும் மருந்து பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் குறைவாக காணப்பட்டது. அதேபோல், ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறை காரணமாக தேவையான பராமரிப்பு நடைபெறாததுடன், மூலிகைத் தோட்டம் அழிவடைந்து காணப்பட்டதுடன், இடத்திலேயே சிகிச்சை பெறும் அலகினை செயற்படுத்த முடியாமையினால் அப்புறப்படுத்துகின்ற மருந்துக்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.	வெற்றிப் பதவிகளுக்காக வேண்டப்பட்டுள்ளது என.	வெற்றிடப் பதவிகளை விரைவாக நிரப்பி மிகவும் ஆக்கபூர்வமான சேவையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 217,931 தொகை பெறுமதியான 265 இருப்பு விடயங்கள் 01 வருடத்திற்கும் 09 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.	எதிர் காலத்தில் சரி செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தேவைப்பாட்டினை சரியாக இனங் காணாமல் மேற்கொண்டிருந்த கொள்வனவு செய்தல் காரணமாக நட்டமொன்று ஏற்பட்டுள்ளதா என பரிசோதனை செய்து அதற்காக பொறுப்பான உத்தயோத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 155 நிறுவனங்களினால் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால், அனுமதிப்பத்திரக் கட்டணம் என ரூபா 0.46 மில்லியன் மற்றும் பரிசோதனைக் கட்டணம் ரூபா 0.30 மில்லியன் தொகை சபையினால் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், சுற்றாடலுக்கான சேதம் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	களப் பரிசோதனை மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரச் செய்முறை ஒன்றிற்கு விரைவாக அங்கீகரித்துக்கொள்வதற்கு நடடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், பெற்றுக்கொண்டிருக்காத நிறுவனங்கள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான 01 ஏக்கருக்கான தேயிலை பயிர்ச் செய்கை நிலப் பரப்பில் 2024 ஜனவரி முதல் திசெம்பர் வரை பரிக்கப்பட்டிருந்த தேயிலைக் கொழுந்துகள் மற்றும் விற்பனை செய்யப்பட்டிருந்த கொழுந்துகளின் எண்ணிக்கையை பரிசோதனை செய்த போது 354 கிலோ தேயிலைக் கொழுந்து காணாமல் போயிருந்தமையால் சபை ரூபா 78,319 ற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.	பொதிகளின் பாரம் மற்றும் ஈரத் தன்மை மற்றும் முதல்வளர்ந்த கொழுந்துகள் போலவே இரண்டு சதவீதம் சராசரி பாரம் குறைவடைகிறது என.	வழமையல்லாத விரயம் தொடர்பான காரணங்களை பரிசோதனை செய்து தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 2017 ஆண்டின் போது ரூபா 34.77 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு மாடிக் கட்டிடத்தில் ஊனமுற்றோருக்கு செல்லக்கூடிய மின்தூக்கியொன்று பொருத்தப்பட்ட போதிலும், அதன் மூலம் சக்கர கதிரை பயன்படுத்தும் ஊனமுற்ற நபருக்கு அதில் நுழைவதற்கு வசதி காணப்படாமையால் 2017 ஆண்டு முதல் மின்தூக்கி செயற்படாமல் காணப்பட்டது.	மின்தூக்கியை உரிய நிலைமைக்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என.	தேவைப்பாட்டினை சரியாக இனங் காணாமல் மேற்கொண்டிருந்த இவ்வாறான செலவுகள் தொடர்பாக பொறுப்பான உத்தயோத்தர்களை பொறுப்பிற்கு ஆளாக்க வேண்டும்.
(ஆ)	புரநெகும செயற்திட்டத்தின் கீழ் முழுமையான விழா மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்கரும கட்டிடம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.	குறைபயன்பாடு ஒன்று ஏற்படவில்லை என.	பல்கரும கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது மின்சார பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக 05 நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த கூறுவிலைகளுடன் இணக்கங் செய்து அண்மித்த தன்மை மற்றும் குறைந்த விலை ஆகிய விடயங்களை கவனத்தில் எடுத்து கொள்வனவு மேற்கொள்ள வேண்டும் என நிதிக் குழுவினால் தீர்மானம் எடுத்திருந்த போதிலும், அதற்கு இணங்காமல் செயற்பட்டிருந்தமையால் சபை நிதியததிற்கு ரூபா 0.17 மில்லியனிற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	நிதிக் குழுவின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	இவ்வாறான நட்டங்கள் எதிர் காலத்தில் ஏற்படாதவாறு கூடிய பெறுகை அலுவல்கள் மேற்கொள்ள வேண்டியதுடன், ஏற்பட்டிருந்த நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு மூன்றாம் தரத்தைச் சேர்ந்த 01 பதவியும், இரண்டாம்	எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்ளப்பட உள்ளது என.	சபையின் பணிப்பொறுப்புகள் மற்றும் விடயப் பரப்புக்களின் படி

தரத்தை சேரந்த 05 பதவிகளும் மிகையாக காணப்பட்டது.		பதவியணி மீளாய்வு ஒன்று மேற்கொண்டு அதன்படி பதவியணியனி முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அங்கியுள்ள புறநெகும வளாகத்தை அண்டி மரக்கறிப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் உத்தேச இலக்கினை அடைந்திருக்கவில்லை.	எதிர் காலத்தின் விவசாய ஆலோசகரின் பரிந்துரையின் படி பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படும் என.	நிலவுகின்ற வளங்கள் மற்றும் நிதியங்களின் வழங்குதல்களை கவனம் செலுத்தி செயல் நடவடிக்கைத் திட்டங்கள் அறிவியல் ரீதியாக தயாரிக்கப்பட்டு செயற்படு நிலைமைக்கு ஆக்க வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
05 செலவு விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து ரூபா 2.46 மில்லியனிற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	அடுத்த ஆண்டு குறைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்த வேண்டும்.